செய்தி வெளியீடு எண்:- 20 5.1.2008

# பத்திரிகை செய்தி

## லெப்டோஸ்பைரோஸிஸ் ஆய்வகம் திறப்பு விழா

## பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநரகம், சென்னை – 6

லெப்டோஸ்பைரோஸிஸ் எனும் விலங்கின நோய் ( Zoonotic Disease ), லெப்டோஸ்பைரா எனும் பாக்டீரியாக்களால் உண்டாகும் நோயாகும். இந்நோய் தமிழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக காணப்படுகிறது.

இந்நோயை தக்க நேரத்தில் கண்டுபிடித்து சிகிச்சை அளித்தால் நோயாளியை பல சிக்ககல்களிலிருந்து காப்பாற்றலாம். காய்ச்சல் மற்றும் மஞ்சள் காமாலை அறிகுறிகளுடன் தென்படும் இந்நோயாளிகளில் பலர் மஞ்சள் காமாலைக்கு மருந்து சாப்பிட்டு நோய் முற்றிய நிலையை அடைகின்றனர்.

தமிழகத்தில் ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டத்தில் ( Integrated Disease Surveillance Project – IDSP ), இந்நோய்யை முக்கியத்துவம் வாய்ந்த நோயாக சேர்க்கப்பட்டு கண்காணிப்பு மற்றும் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

உலக சுகாதார நிறுவனத்தின் ( World Health Organization ) வழிமுறைகளின் படி இந்நோயை ஆய்வக பரிசோதனையில் உறுதி செய்வதின் மூலமே மருத்துவ சிகிச்சைகள் மேற்கொள்ள இயலும்.

தமிழகத்தில் இந்நோயை ஆய்வகத்தின் மூலம் கண்டுபிடிக்கவும் மற்றும் உறுதி செய்து தொடர் சிகிச்சை மற்றும் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் பொது சுகாதார துறையின் கீழ் இயங்கும் மத்திய மலேரியா ஆய்வக வளாகத்தில் லெப்டோஸ்பைரோஸிஸ் பரிசோதனை நிலையம் ஏற்படுத்தபட்டுள்ளது.

அரசு செயலாளர், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை திரு வி. கே. சுப்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் **04.01.2008** (வெள்ளிக்கிழமை) காலை **9.30** மணியளவில் இவ்வாய்வகத்தினை திறந்துவைத்தார். இவ்வாய்வகம் நோய் கண்டறிதல், நோய் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ளும். இந்த ஆய்வகத்தின் மொத்த செலவு ரூ **20.00** லட்சங்களாகும்.

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு
மருந்துத் துறை இயக்குநர், சென்னை – 6

**வெளியீடு, இயக்குநர்,**
**செய்தி, மக்கள் தொடர்புத் துறை,**
**தலைமைச் செயலகம், சென்னை -9.**